தேவஸ்தானம்மூலம் அங்கே தடையாணை பெற்ற பிறகு அந்தத் தீர்ப்பானது இன்னும் பெறப்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதி மக்களுடைய தேவையைக் கருத்தில் கொண்டு, இப்போது அந்தப் பகுதியிலே நம்முடைய மாநிலங்களவை உறுப்பினர் மலைச்சாமி அவர்களால் மூன்று இலட்சம் ரூபாய் அளவிலே அங்கே தினசரி மார்க்கெட் அருகில் பயணிகள் நிழற்குடை ஒன்று அமைப்பதற்காக ஒப்புதல் வழங்கப்பட்டு, அந்தப் பணியானது கூடிய விரைவிலே தொடங்கப்பட இருக்கிறது. அந்தப் பணி தொடங்கப்பட்ட பிறகு, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு அந்தப் பேருந்து நிலையம்– அதைப் பயன்படுத்துகின்ற நேரத்திலே மாற்று இடத்தைக் கண்டறிந்து, அந்த மாற்று இடத்திலே மீண்டும் பேருந்து நிலையம் அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அமர்கிறேன்.

4. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதியில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது ஒரு அறிக்கையினை அளிப்பார்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு – கர்நாடக எல்லையில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதி முக்கிய சுற்றுலாப் பகுதியாகும். இங்கு வருகை புரியும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காகவும், வசதிக்காகவும், சுற்றுலாப் பயணிகளின் கோரிக்கையின் அடிப்படையில், தமிழக அரசு சில பணிகளை மேற்கொள்ள முற்பட்டது. இப்பணிகள் மேற்கொள்ளப்படும் இடம், கர்நாடக மாநில எல்லைக்குள் இருப்பதாகப் பிரச்சினை எழுப்பப்பட்டது.*

தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் 16–9–2005 அன்று கர்நாடக மாநிலத்தின் வனத் துறை அலுவலர்களும் மற்றும் தமிழ்நாடு வனத் துறை அலுவலர்களும் கூட்டாக, சம்பந்தப்பட்ட இடத்தைப் பார்வையிட்டனர். அதன் பின்னர், 19–9–2005 அன்று கர்நாடகா மற்றும் தமிழ்நாடு அலுவலர்கள் இணைந்து மேற்கொண்ட நில அளவையின் அடிப்படையில், மேற்படி பணிகள் தமிழ்நாட்டு

2005 செப்டம்பர் 26] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எல்லைக்குள்தான் மேற்கொள்ளப்படுகின்றன என்று உறுதி செய்யப்பட்டது என்று தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இதனை ஆட்சேபித்து, 20–9–2005 அன்று, கர்நாடக மாநிலம், சாம்ராஜ் நகர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் இப்பகுதிக்கு வருகை தந்து, பணிகள் மேற்கொள்ளக் கூடாது என்று தெரிவித்தனர். மேலும், 25–9–2005 அன்று சாம்ராஜ் நகர் மாவட்டத்தைச் சேர்ந்த சில அமைப்புகள் வேண்டுமென்றே இப்பகுதிக்கு வருகை தந்து, இப்பகுதி கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்ததுதான் என்று நிலைநிறுத்த முற்பட்டனர்.

தற்போது கர்நாடகத்தால் ஆட்சேபனை செய்யப்படும் இடம் எப்பொழுதுமே தமிழகத்தின் பகுதியாகவே உள்ளது. தற்போது சுற்றுலாப் பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்புக்காக கைப்பிடிக் கம்பிகள் (Railings) அமைக்கப்படவிருந்த பகுதி, வரைபடங்களின் அடிப்படையிலும், உபயோகத்தின் அடிப்படையிலும், திட்டவட்டமாக தமிழ்நாட்டின் எல்லைக்குள்தான் உள்ளன. சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்படும் இப்பணிகளுக்கு, தேவையற்ற ஆட்சேபனையை கர்நாடகம் ஏன் தெரிவிக்கிறது என்று தெரியவில்லை. இது தேவையற்ற ஒரு சர்ச்சையாகும். இவ்வாறான தேவையற்ற ஒரு பிரச்சினையை கர்நாடக அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன். (குறுக்கீடு) ஒன்றும் இல்லை, உட்காருங்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003–2006 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் நூற்று இருபத்து ஒன்று மற்றும் நூற்று இருபத்து இரண்டாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.